Press Information Bureau
Government of India
Chennai

**Dinamani** **Date: 09-10-17**

# பப்பாளியில் இருந்து டிஎன்ஏ-வைப் பிரிக்கும் செய்முறை: அறிவியல் விழாவில் செய்து காட்டவுள்ள தமிழக மாணவர்கள்



**சென்னை,அக்.8:** பப்பாளிப் பழத்திலிருந்து டி.என்.ஏ.வைப் பிரிக்கும் செய்முறையை சென்னையில் நடைபெற உள்ள இந்திய சர்வதேச அறிவியல் விழாவில் தமிழகப் பள்ளி மாணவர்கள் நேரடியாகச் செய்து காட்ட உள்ளதாக மத்திய அறிவியல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் கூறினார்.

சென்னை செய்தியாளர்களிடம் ஞாயிற்றுக்கிழமை ஹர்ஷ் வர்தன் கூறியது: சுமார் 44 நாடுகளுடன் கூட்டுறவு மேற்கொண்டு அறிவியல், தொழில்நுட்பம் சார்ந்த ஆராய்ச்சிகளை இந்தியா மேற்கொண்டு வருகிறது.

இதுபோன்ற நடவடிக்கைகள் காரணமாக, இந்திய ஆராய்ச்சி நிறுவனங்களும் உலக அரங்கில் முன்னிலை பெற்று வருகின்றன. கடந்த ஆண்டு நடத்தப்பட்ட அறிவியல், தொழில்நுட்ப விழாவின்போது வெளியிடப்பட்ட புள்ளி விவரங்களின்படி, உலகம் முழுவதும் அரசு நிதியுதவியுடன் இயங்கி வரும் 1,200 அறிவில் தொழில்நுட்ப ஆராய்ச்சி நிறுவனங்களின் பட்டியலில், இந்தியாவின் விஞ்ஞான தொழில் ஆராய்ச்சிக் கழகம் (சி.எஸ்.ஐ.ஆர்.) 12 -ஆவது இடம் பெற்றிருந்தது. இந்த ஆண்டு 9 -ஆவது இடம் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

மூன்றாவது இந்திய சர்வதேச அறிவியல் விழா வரும் 13- ஆம் தேதி முதல் 16- ஆம் தேதி வரை சென்னை ஐஐடி, அண்ணா பல்கலைக்கழகம், மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும் சென்னைப் பல்கலைக்கழக வளாகங்களில் நடைபெற உள்ளது.

இதில் அறிவியல் தொழில்நுட்ப அமைச்சர்களின் சந்திப்பு நடைபெற உள்ளது. மியான்மர், வங்கதேசம் மற்றும் ஆப்கன் நாடுகளைச் சேர்ந்த அமைச்சர்கள் பங்கேற்க உள்ளனர்.

அறிவியல் கிராமம், மத்திய அரசின் ஆராய்ச்சி மேம்பாட்டுத் திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள், அடிநிலை மற்றும் புதுமைப் படைப்பாளர்களுக்கான மாநாடு, மகளிர் விஞ்ஞானிகள் மற்றும் தொழில்முனைவோர் சங்கமம், தேசிய அறிவியல் ஆசிரியர்கள் பயிலரங்கு, அறிவியல் திரைப்பட விழா, ஆழ்கடல் ஆய்வு மற்றும் பல்லுயிர்ப் பெருக்கம் குறித்த அமர்வுகள் என பல்வேறு நிகழ்ச்சிகள் இடம்பெற உள்ளன.

வடகிழக்கு மாநிலங்களைச் சேர்ந்த 125 அறிவியல் ஆசிரியர்கள் உள்பட நாடு முழுவதிலுமிருந்து 400 அறிவியல் ஆசிரியர்கள், 400 நிறுவனங்கள், 300 பெண் விஞ்ஞானிகள் மற்றும் தொழில்முனைவோர் பங்கேற்க உள்ளனர்.

இந்த விழாவில் இடம்பெற உள்ள கண்காட்சியில் 300 நிறுவனங்கள் பங்கேற்று, படைப்புகளைக் காட்சிப்படுத்த உள்ளன. பள்ளி மாணவர்களுக்கான புதிய கண்டுபிடிப்புக்கான போட்டியும் இடம்பெறும்.

தமிழக பள்ளி மாணவர்கள் 1,000 பேர் பப்பாளிப் பழத்திலிருந்து டி.என்.ஏ.வைப் பிரித்தெடுக்கும் செய்முறையை கின்னஸ் சாதனை முயற்சிக்காக செய்கின்றனர்.

Press Information Bureau
Government of India
Chennai

**Dina Ethal** Date: 09-10-17

13ந் தேதி முதல்

# சென்னையில் இந்திய - சர்வதேச அறிவியல் கொண்டாட்டம்

## மத்திய அமைச்சர் ஹர்ஷவர்த்தன் தகவல்

சென்னை, அக்.9–

இந்தியா மற்றும் சர்வதேச அறிவியல் கொண்டாட்ட நிகழ்ச்சி வரும் 13 ந் தேதி முதல் 16 ந் தேதி வரை நடைபெறுகிறது என மத்திய அமைச்சர் ஹர்ஷவர்த்தன் தெரிவித்தார்.

இதுகுறித்து சென்னையில் மத்திய அறிவியல்,தொழில்நுட்பம், புவி அறிவியல், சுற்றுசூழல், வனம், பருவமாற்றத்துறை அமைச்சர் ஹர்ஷவர்த்தன் இந்தியா சர்வதேச அறிவியியல் கொண்டாட்டத்தின் நிகழ்ச்சி நிரல் கையேட்டினை வெளிட்டார். அதனை மத்திய அரசின் செயலாளர் ராஜீவன், தமிழக உயர் கல்வித்துறை செயலாளர் சுனில்பாலிவால், தொழில்நுட்ப கல்வி இயக்கத்தின் ஆணையர் பழனிசாமி, அண்ணாப் பல்கலைக் கழக பதிவாளர் கணேசன் உள்ளிட்டவர்கள் பெற்றுக் கொண்டனர்.

பின்னர் மத்திய அமைச்சர் ஹர்ஷவர்த்தன் செய்தியாளர்களிடம் கூறியதாவது, பன்னாட்டு அறிவியல் வார விழா வரும் 13ந் தேதி முதல் 16ந் தேதி வரை நடைபெறுகிறது. இந்த விழாவில் 15 வகையான அறிவியல் தொடர்பான நிகழ்ச்சிகள் நடத்தப்படும். இந்த விழா சென்னை அண்ணா பல்கலைக் கழகம், மத்திய தோல் ஆராய்ச்சி நிறுவனம், கட்டுமான பொறியியல் ஆராய்ச்சி மையம், தேசிய கடல்சார் தொழில்நுட்ப நிறுவனம், சென்னை இந்திய தொழில்நுட்பக் கல்வி கழகம் ஆகிய 5 இடங்களில் நடைபெறுகிறது.




பிரதமரின் அறிவியல் நகரம் என்ற திட்டம் பிரதமர் நாடாளுமன்ற மாதிரி கிராமத்திட்டத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதன் மூலம் ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினரும் தாங்கள் தத்தெடுத்துள்ள கிராமங்களில் இருந்து 5 மாணவர்களை அழைத்து வருவர். இதன் மூலம் அந்த கிராம மாணவர்களுக்கும் அறிவியல் குறித்து தெரிந்துக் கொள்ள முடியும்.

மத்திய அரசின் முதன்மையான திட்டங்களான தூய்மை இந்தியா இயக்கம், மேக்இன் இந்தியா, டிஜிட்டல் இந்தியா உள்ளிட்ட திட்டங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்படும். தேசிய புதுமையாக்க நிறுவனத்திற்கு தங்களின் புதிய கண்டுபிடிப்புகளை அனுப்பியவர்களில் இருந்து 100 கண்டுப்பிடிப்புகள் கண்காட்சியில் இடம் பெறும்.

அறிவியல் மாநாட்டில் புதுமையாக மகளிர் விஞ்ஞானிகள், தொழில் முனைவோர் கருத்தரங்கு நடத்தப்படும். தொழில் நிறுவனங்களுக்கும் கல்வி நிறுவனங்களுக்கும் இடையில் ஆய்வு, மேம்பாடு பணியில் உள்ள உறவை ஏற்படுத்துவதையும் உற்பத்தியிலும், தயாரிப்பிலும் மேம்பட்ட திறனை எட்டுவதிலும் குறிக்கோளாக கொண்டு கருத்தரங்கு நடத்தப்படும். வடகிழக்கு மாநிலங்களை சேர்ந்த 125 மாணவர்கள் பங்கேற்கும் அறிவியல் கற்கும் நிகழ்ச்சியும் நடைபெறும்.

இந்தியா, தென்கொரியா, பிரான்ஸ், ஜெர்மனி, சுவீடன், பிரிட்டன், ஆஸ்திரேலியா, நர்வே, இத்தாலி, அமெரிக்க ஆகிய 9 நாடுகளில் உருவாக்கப்படும் அறிவியல் கதைகள் கொண்ட திரைப்படங்கள் திரையிடப்படும். இந்தியாவில் தேர்வு செய்யப்பட்ட 29 அறிவியல் திரைப்படங்களும், 9 நாடுகளில் தயாரிக்கப்பட்ட 24 அறிவியல் திரைப்படங்களும் திரையிடப்படும்.

ஆழ்கடல் ஆராய்ச்சி குறித்தும், தேசிய பல்லுயிர் செயல்பாட்டுத் திட்டம் அடிப்படையில் பல்லுயிர் பெருக்கம், பல்லுயிர் சட்டம் குறித்தும் கருத்தரங்கு நடைபெறும். கின்னஸ் சாதனை புத்தகத்தில் இடம் பெறும் வகையில் 1000 பள்ளி மாணவர்கள் உயிரியல் பாடத்தில் இருந்து செல் உயிரியல் குறித்து விளக்கப்படும். அதனைத் தொடர்ந்து பள்பாளிப் பழங்களிலிருந்து அதன் மரபணுவை பிரித்தெடுக்கும் செயல்முறை நடத்தப்படும். மேலும் தமிழக மாணவர்களுக்காக புதுமைப் படைப்பாளர் போட்டிகள் இத்துடன் நடத்தப்படும்.

அறிவியல், தொழில்நுட்ப மற்றும் தொழில் நிறுவனங்களின் கண்காட்சி மிகப்பெரிய அளவில் நடத்தப்படும். இந்த பன்னாட்டு அறிவியல் கொண்டாட்டத்தினை அண்டை நாடுகளில் இருந்து அறிவியல் துறை சார்ந்த அமைச்சர்கள் துவக்கி வைக்க உள்ளனர். இதன் நிறைவு விழாவில் இந்தியாவின் துணை குடியரசுத் தலைவர் வெங்கையாநாயுடு, தமிழக ஆளுநர் பன்வாரிலால் புரோகித், தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி உள்ளிட்டவர்கள் கலந்து கொள்ள உள்ளனர் என தெரிவித்தார்.